நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கல் துறை
மேட்டூர் நகராட்சி

மேட்டூர் நகராட்சியின் சாதாரணக் கூட்டம் நகர்மன்றத்தில் நகராட்சியின் தனி அலுவலர் அவர்களால் **11.01.2019ம் தேதி பிற்பகல் 4.00 மணிக்கு நடைபெற உள்ளது.**

மன்றப் பொருள்

**1)** இந்நகராட்சி பொது சுகாதாரப்பிரிவு டெங்கு காய்ச்சல் தடுப்பு நடவடிக்கைகளான டெங்கு கொசுப்புழு ஒழிப்பு பணியாளர்கள் மூலம் வீடு வீடாக சென்று தண்ணீர் தொட்டிகளில் அபேட் மருந்து தெளித்தல் மற்றும் டெங்கு கொசுப்புழு உற்பத்தியாகும் இடங்களை கண்டறிந்து அழித்தல் பணிக்கு சேலம் மாவட்ட ஆட்சித்தலைவர் அவர்களின் ஆய்வுக் கூட்ட அறிவுரைகளுக்கிணங்க ஜனவரி 2019 முதல் மார்ச் 2019 முடிய 3 மாதங்களுக்கு ஸ்ரீ குமரன் மகளிர் சுய உதவிக்குழு பனி மலர்கள் மகளிர் சுய உதவிக்குழு மற்றும் நவரத்தினம் மகளிர் சுய உதவிக்குழு ஆகிய குழுக்களை சேர்ந்த 31 பணியாளர்களை ரூ.200/– தினக்கூலி அடிப்படையில் பயன்படுத்திக் கொள்ள துப்புரவு ஆய்வர் கோரியுள்ளார். அதன்படி மேற்கண்ட மகளிர்ர சுய உதவிக்குழுக்களை சேர்ந்த 31 பணியாளர்களை தினக்கூலி ரூ.200/– என்ற அடிப்படையில் 3 மாதங்களுக்கு டெங்கு தடுப்பு பணிகளுக்கு பயன்படுத்திக் கொள்ளவும் அதற்காகும் தோராய செலவினம் ரூ.5,58,000/–ம் (ரூபாய் ஐந்து இலட்சத்து ஐம்பத்து எட்டாயிரம் மட்டும்) மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

அலுவலக குறிப்பு

1. மன்றம் அனுமதிக்கலாம்
2. செலவினத் தொகையினை வருவாய் நிதியில் மேற்கொள்ள மன்றம் அனுமதி வழங்கலாம்

**(ந.க.எண்.758/2018/எச்1)**

**தீர்மான எண். 1 நாள். 11.01.2019**

அனுமதிக்கப்பட்டது

2) மேட்டூர் நகராட்சியில் பொது சுகாதாரப்பிரிவில் அனைத்து வார்டுகளிலும் குப்பைகளை எடுக்க பயன்படுத்தப்பட்டு வரும் 15 எண்ணிக்கைகளை காம்பேக்டர் பின்கள் மிகவும் பழுதடைந்துள்ளது. நகரில் உள்ள குப்பைகளை அகற்றபடாமல் உள்ளதால் மேற்கண்ட 15 எண்ணிக்கைகளை காம்பெக்டர் பின்கள் சரி செய்ய உத்தேச செலவினத் தொகை ரூ.4.00 இலட்சம் ஆகும். மேற்கண்ட செலவினத்தை மேற்க்கொள்ள மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

அலுவலக குறிப்பு

1. மன்றம் அனுமதிக்கலாம்
2. இதற்காகும் செலவினத்தை நகராட்சி நிதியிலிருந்து மேற்க்கொள்ளலாம்.
3. அவசர அவசியம் கருதி தனி அலுவலர் முன்னனுமதி பெற்று மன்ற அனுமதியினை எதிர்நோக்கி ஒப்பந்தபுள்ளி கோரவும் மன்றம் ஏற்கலாம்.

**(ந.க.எண்.6184/2018/இ1)**

**தீர்மான எண். 2 நாள். 11.01.2019**

அனுமதிக்கப்பட்டது

**3)** மேட்டூர் நகராட்சியில் பொது சுகாதாரப்பிரிவில் அனைத்து வார்டுகளிலும் குப்பைகள் எடுக்க பயன்படுத்தப்பட்டு வரும் **15** டம்பர் பிளசர் பின்கள் மிகவும் பழுதடைந்து குப்பைகளை முழுமையாக எடுத்து அப்புறப்படுத்தி இயலாத நிலையில் உள்ளதால் மேற்க்கண்ட **15** எண்ணிக்கையிலான டம்பர் பிளசர் பின்கள் சரிசெய்ய உத்தேச செலவினத்தொகை ரூ.**4.80** இலட்சம் ஆகும். மேற்கண்ட செலவினத்தை மேற்கொள்ள மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

அலுவலக குறிப்பு

1. மன்றம் அனுமதிக்கலாம்
2. இதற்காகும் செலவினத்தை பொது நிதியிலிருந்து மேற்க்கொள்ளலாம்.
3. அவசர அவசியம் கருதி தனி அலுவலர் முன்னனுமதி பெற்று மன்ற அனுமதியினை எதிர்நோக்கி ஒப்பந்தபுள்ளி கோரவும் மன்றம் ஏற்கலாம்.

**(ந.க.எண்.6185/2018/எச்1)**

**தீர்மான எண். 3 நாள். 11.01.2019**

அனுமதிக்கப்பட்டது

**4)** மேட்டூர் நகராட்சியில் அலுவலக உபயோகத்திற்கு பயன்படுத்தப்படும் வாகன எண்.TN52V4660 வாகனத்திற்கு ஆயில் சர்வீஸ் ,கிரவுன்கீர் பாக்ஸ் 4வீல் கிரிஸ் மற்றும் இதர பழுதுகளை சரி செய்யவும் மேற்கண்ட வாகனத்தினை மகேந்திரா &மகேந்திரா நிறுவனமானSKS ஆட்டோ மொபைல்ஸ்யில் பழுதுகளை சரி செய்ய உத்தேச செலவினத் தொகை ரூ.20,000/– ஆகும். மேற்கண்ட செலவினத்தை மேற்க்கொள்ள மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

அலுவலக குறிப்பு

1. மன்றம் அனுமதிக்கலாம்
2. இதற்காகும் செலவினத்தை பொது நிதியிலிருந்து மேற்கொள்ளலாம்
3. அவசர அவசியம் கருதி தனிஅலுவலர் முன்னனுமதி பெற்று மன்ற அனுமதியினை எதிர்நோக்கி பணி உத்திரவு வழங்கியமைக்கு மன்றம் ஏற்கலாம்.

**(ந.க.எண்.6016/2018/இ1)**

**தீர்மான எண். 4 நாள். 11.01.2019**

அனுமதிக்கப்பட்டது

**5)** இந்நகராட்சிக்குச் சொந்தமான MUDF திட்டத்தில் கட்டப்பட்டு காலியாக உள்ள கடைகளுக்கு **04.12.2018**ல் ஆறாவது முறையாக மறு ஏலம் / ஒப்பந்தப்புள்ளி கோரியதில், ஏலம் கோர எவரும் முன்வரவில்லை. கடை எண்.**4**க்கு மட்டும் கீழ்க்கண்டுள்ளவாறு இரண்டு ஒப்பந்தப்புள்ளிகள் வரப்பெற்றுள்ளது. வரப்பெற்ற இரண்டு ஒப்பந்தப்புள்ளிகள் மன்றத்தின் பார்வைக்கும், முடிவிற்கும் வைக்கப்படுகிறது.

| வ.எண். | ஒப்பந்தப்புள்ளி கொடுத்தவர் பெயர் | ஒப்பந்தப்புள்ளியில் கோரிய அதிகபட்ச தொகை (பிரதி மாத வாடகை) |
|---|---|---|
| 1. | திரு.எஸ்.ராஜா,<br>த/பெ.எம்.ஆர்.செல்வம்,<br>F- பிளாக்–**54**,<br>தொழிலாளர் இல்லப்பகுதி,<br>மேட்டூர் அணை. | ரூ.7400/- |
| 2. | திரு.கே.கந்தசாமி,<br>த/பெ.குப்புசாமி,<br>**10/61**ஏ**22**, ஸ்டேட் பாங்க் பின்புறம்,<br>மேட்டூர் அணை. | ரூ.6201/- |

<u>அலுவலகக் குறிப்பு</u>

மேற்படி கடை எண்.**4**க்கு வரப்பெற்ற இரண்டு ஒப்பந்தப்புள்ளிகளில் வரிசை எண்.**1**ல் கண்டுள்ள திரு.எஸ்.ராஜா, மேட்டூர் அணை என்பவர் அதிகபட்சமாக மாதம் ஒன்றுக்கு வாடகையாக ரூ.7400/-க்கு ஒப்பந்தப்புள்ளி வழங்கியுள்ளார். இக்கடைக்கு ஏற்கனவே இருந்த பழைய வாடகைத் தொகை ரூ.6371/- ஆகும். இக்கடைக்கு **9** ஆண்டுகள் முடிவடைந்ததால் சந்தை மதிப்பு அடிப்படையில் கண்காணிப்புக்குழுவால் நிர்ணயிக்கப்பட்ட புதிய வாடகைத் தொகை ரூ.8919/-ஆகும். மேற்படி சந்தை மதிப்பு அடிப்படையில் நிர்ணயிக்கப்பட்ட வாடகைத் தொகை அதிகமாக இருப்பதாக தெரிவித்து, இக்கடையை நடத்தி வந்த உரிமதாரர், கடையை நகராட்சி வசம்திரும்ப ஒப்படைத்து விட்டார். அதனை தொடர்ந்து இக்கடைக்கு **27.03.2018** முதல் முறையும் **08.06.2018**ல் இரண்டாம் முறையும் **09.10.2018**ல் மூன்றாம் முறையும் **24.10.2018**ல் நான்காம் முறையும் **20.11.2018**ல் ஐந்தாம் முறையும் மறு ஏலம் / ஒப்பந்தப்புள்ளி கோரப்பட்டுள்ளது. இதுவரை ஏலமோ / ஒப்பந்தப்புள்ளியோ எவரும் கோரவில்லை. எனவே நகராட்சிக்கு தொடர்ந்து ஏற்பட்டு வரும் நிதியிழப்பை தவிர்க்கும் பொருட்டு, மேற்படி அதிகபட்சமாக வழங்கிய ஒப்பந்தப்புள்ளியை ஏற்பது குறித்து மன்றம் பரிசீலித்து முடிவு செய்யலாம்.

**(ந.க.எண். 10137/2006/அ3)**

**தீர்மான எண். 5 நாள். 11.01.2019**

அனுமதிக்கப்பட்டது

**6)** மேட்டூர் நகராட்சியில் வளர்ச்சி பணிகள் குறித்து தின மலர் நாளிதழ் வெளியிட்டமைக்கு தினமலர் நாளிதழிலிருந்து பட்டியல் தொகை ரூ.**9504/–** வழங்குமாறு பட்டியல் வரப்பெற்றுள்ளது. மேற்கண்ட தொகையினை தினமலர் நாளிதழ்களுக்கு வழங்க மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

அலுவலக குறிப்பு

1. மன்றம் அனுமதிக்கலாம்
2. இதற்காகும் செலவினத்தை பொது நிதியிலிருந்து மேற்கொள்ளலாம்
3. தனி அலுவலர் முன்னனுமதி பெற்று மன்ற அனுமதியினை எதிர்நோக்கி தொகை ரூ.9504/– தினமலர் நாளிதழ்களுக்கு வழங்குவதற்கும் மன்றம் ஏற்கலாம்.

**(ந.க.எண்.3802/2018/இ1)**

**தீர்மான எண். 6 நாள். 11.01.2019**

அனுமதிக்கப்பட்டது

7) மேட்டூர் நகராட்சியில் தூய்மை இந்தியா திட்டம் 2018–2019ன் கீழ் திடக்கழிவு மேலாண்மை திட்டத்தில் 7வது உயர்மட்ட குழு கூட்ட நாள்.13.08.2018ன்படியும் நகராட்சி நிர்வாக ஆணையர், சென்னை அவர்களின் செயல்முறை கடித ந.க.எண்.22866/P3/2018 நாள்.23.08.2018ன் படியும் நிர்வாக அனுமதி வழங்கப்பட்ட வார்டு B பிளாக் 2 நகரளவை எண்.2 உள்ள உரக்கிடங்கில் நகராட்சிக்குட்பட்ட அனைத்து பகுதிகளிலிருந்தும் கடந்த 20 வருடங்களாக சேகரிக்கும் குப்பைகளை Techco Metric மூலம் அளவீடு செய்து 49823cum குப்பைகளை Bio Mining செய்யும் பணிக்கு The Director, centre for Environmental Studies Anna University சென்னை அவர்களிடம் மேற்கண்ட உரக்கிடங்கில் உள்ள legacy waste அளவினை முதல்முறை மொத்த Legacy Waste Quantity மற்றும் ஒப்பந்ததாரர் Legacy Waste னை அகற்றி பில் தொகை கோரும் ஒவ்வொரு முறையும் (மொத்தம் 5 முறை)Legacy Waste Quantity Removed க்கான சான்றினை அளவீடு செய்து அறிக்கையினை The Director Centre for Environment Studies Anna University Chennai அவர்களிடம் இருந்து பெற Consultancy Fees செலவினத்தை மேற்கொள்ள மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

அலுவலக குறிப்பு

1. மன்றம் அனுமதிக்கலாம்.
2. இதற்காகும் செலவினத்தை பொது நிதியிலிருந்து மேற்கொள்ளலாம்
3. அவசர அவசியம் கருதி தனி அலுவலர் முன்னனுமதி பெற்று மன்ற அனுமதியினை எதிர்நோக்கி முதல் முறையாக Consultancy Fees ரூ.1,77,000/– வழங்கியமைக்கு மன்றம் ஏற்கலாம்

**(ந.க.எண்.2299/2018/ இ1)**

**தீர்மான எண். 7 நாள். 11.01.2019**

அனுமதிக்கப்பட்டது

8) மேட்டூர் நகராட்சியில் குடிநீர் அபிவிருத்தி திட்டத்தில் வருடாந்திர பராமரிப்பு மற்றும் இயக்குதல் பணிக்கு தலைமைப்பொறியாளர் நகராட்சி நிர்வாக ஆணையர் , சென்னை அவர்கள் ஒப்பந்தபுள்ளி நமுனாவிற்கு அனுமதி வழங்கப்பட்டு 15.02.2017ல் திரு.K.கோவிந்தன் ஒப்பந்ததாரர்க்கு பணி உத்திரவு வழங்கப்பட்டு பிப்ரவரி–2018 மாதத்துடன் முதல் வருடம்

நிறைவடைந்தது. அடுத்த வருடத்திற்கு ஆண்டு பராமரிப்பு செலவுத்தொகை ரூ.17.06 இலட்சத்திற்கு நகர்மன்ற அனுமதி பெறப்பட்டு மேற்க்கண்ட பராமரிப்பு பணி தொடர்ந்து மேற்க்கொள்ளப்பட்டு வருகிறது.

வருடாந்திர பராமரிப்பு மற்றும் இயக்குதல் பணிக்கு மூன்றாம் ஆண்டிற்கு பராமரிப்பு தொகை ரூ.17.06 இலட்சத்திற்கும் பணியினை தொடர்ந்து அதே ஒப்பந்ததாரர் மூலம் ஒப்பந்த விதிகளின்படி மேற்க்கொள்ள மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

அலுவலக குறிப்பு

1. மன்றம் அனுமதிக்கலாம்
2. இதற்காகும் செலவினத்தை குடிநீர் நிதியிலிருந்து மேற்க்கொள்ளலாம்.

**(ந.க.எண். 4495/2016/ இ1)**

**தீர்மான எண். 8 நாள். 11.01.2019**

அனுமதிக்கப்பட்டது

**9)** மேட்டூர் நகராட்சியில் சின்னபார்க் மேற்கு நுழைவாயில் பகுதியில் Parer Block அமைத்தல் பணிக்கு ரூ.**5.00** இலட்சம் மதிப்பீட்டில் ஒப்பந்தப்புள்ளிகள் கோரியதில் **11.01.2019**ம் தேதியன்று வரப்பெற்ற கீழ்க்காணும் இரண்டு ஒப்பந்தப்புள்ளிகள் மன்றத்தின் முடிவிற்கு வைக்கப்படுகிறது.

| வ எண் | ஒப்பந்ததாரர் பெயர் | ஒப்பந்தப்புள்ளி சதவிகிதம் அதிகம்/ குறைவு |
|---|---|---|
| 1 | திரு.MPP & CO<br>Contractor<br>Mettur Dam-1 | **0.20%** சதவிகிதம் மதிப்பீட்டை விட குறைவு |
| 2 | திரு. Andavar Constraction<br>West Main Road<br>Mettur Dam | **2.40%** சதவிகிதம் மதிப்பீட்டை விட அதிகம் |

<u>அலுவலக குறிப்பு</u>

வரப்பெற்றுள்ள இரண்டு ஒப்பந்தப்புள்ளிகளில் மதிப்பீட்டு விலை விகிதத்தை விட 0.20% சதவீதம் குறைவாக ஒப்பந்தப்புள்ளி விலை விகிதம் கொடுத்துள்ள திருவாளர் திரு.MPP & CO, Contractor, Mettur Dam ஒப்பந்ததாரரது ஒப்பந்தப்புள்ளியினை மன்றம் ஏற்றுக் கொள்ளலாம்.

**(ந.க.எண்.5895/2018/ இ1)**

**தீர்மான எண். 9 நாள். 11.01.2019**

அனுமதிக்கப்பட்டது

**10)** மேட்டூர் நகராட்சி சதுரங்காடி தினசரி மார்க்கெட் கட்டிடத்தின் மராமத்து பணி மேற்கொள்ளுதல் பணிக்கு ரூ.**7.50** இலட்சம் மதிப்பீட்டில் ஒப்பந்தப்புள்ளிகள் கோரியதில் **11.01.2019**ம் தேதியன்று வரப்பெற்ற கீழ்க்காணும் இரண்டு ஒப்பந்தப்புள்ளிகள் மன்றத்தின் முடிவிற்கு வைக்கப்படுகிறது.

| வ எண் | ஒப்பந்ததாரர் பெயர் | ஒப்பந்தப்புள்ளி சதவிகிதம் அதிகம்/ குறைவு |
|---|---|---|
| 1 | திரு.சி.பி.சாமி &கோ<br>மராமத்துப்பட்டி, கோனூர்(அஞ்சல்)<br>மேட்டூர் | 0.20% சதவிகிதம் மதிப்பீட்டை விட குறைவு |
| 2 | திருவாளர்.கிருத்திகா, கன்ஸ்ரக்சன்<br>சேலம் கேம்ப், மாடிலைன்<br>மேட்டூர் | 2.10% சதவிகிதம் மதிப்பீட்டை விட அதிகம் |

<u>அலுவலக குறிப்பு</u>

வரப்பெற்றுள்ள இரண்டு ஒப்பந்தப்புள்ளிகளில் மதிப்பீட்டு விலை விகிதத்தை விட 0.20% சதவீதம் குறைவாக ஒப்பந்தப்புள்ளி விலை விகிதம் கொடுத்துள்ள திருவாளர் சி.பி..சாமி & கோ ஒப்பந்ததாரரது ஒப்பந்தப்புள்ளியினை மன்றம் ஏற்றுக் கொள்ளலாம்.

**(ந.க.எண்.5790/2018/ இ1)**

**தீர்மான எண். 10 நாள். 11.01.2019**

அனுமதிக்கப்பட்டது

ஆணையாளர் (ம) தனி அலுவலர்,
மேட்டூர் நகராட்சி

<u>நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கல் துறை</u>
<u>மேட்டூர் நகராட்சி</u>

மேட்டூர் நகராட்சியின் சாதாரணக் கூட்டம் நகர்மன்றத்தில் நகராட்சியின் தனி அலுவலர் அவர்களால் **30.01.2019** ம் தேதி பிற்பகல் **4.00** மணிக்கு நடைபெற உள்ளது.

<u>மன்றப் பொருள்</u>

1) மேட்டூர் நகராட்சியில் குடிநீர் அபிவிருத்தி திட்டத்தின் கீழ் விடுபட்ட தெருக்கள் மற்றும் புதியதாக உருவாக்கப்பட்ட தெருக்களில் உள்ள குடிநீர் குழாய்கள் (Distribution main) அமைக்க திட்ட பிரேரனை ரூ.155.00 இலட்சம் மதிப்பீட்டில் தயார் செய்யப்பட்டு நகராட்சி நிர்வாக மண்டல இயக்குநர், சேலம் அவர்களின் வழியாக நகராட்சி நிர்வாக ஆணையர், சென்னை அவர்களுக்கு சமர்ப்பிக்கப்பட்டு, விடுபட்ட பகுதியில் பகிர்மான குழாய் பதிக்க ஒருங்கிணைந்த நகர்புற வளர்ச்சி திட்டம் 2018-2019 ன் கீழ் அரசாணை எண்.82 நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கல் (MA2) துறை நாள்.23.08.2018 ரூ.155.00 நிதி ஒதுக்கீடு பெறப்பட்டது.

அதன் அடிப்படையில் மேற்கண்ட பணிக்கு தொழில்நட்ப அனுமதி பெற திட்ட பிரேரனை மண்டல செயற் பொறியாளர் சேலம் அவர்கள் வழியாக தலைமைப் பொறியாளர் நகராட்சி நிர்வாக ஆணையரகம், சென்னை அவர்களிடம் சமர்ப்பிக்கப்பட்டு தலைமைப் பொறியாளர் சென்னை அவர்கள் செயல்முறை கடித ந.க.எண்.18281/2017/Do1 நாள்.11.01.2019 பெறப்பட்டது.

நிர்வாக அனுமதி தொழில்நுட்ப அனுமதி பெற திட்ட பிரேரணை தயார் செய்ய இந்நகராட்சியில் உதவிப்பொறியாளராக பணிபுரியும் திருமதி.S.பிரேமா தன்னால் ரூ.37,760/- செலவு செய்யப்பட்டது என தெரிவித்துள்ளார். மேற்கண்ட செலவினத்திற்கு திருமதி.S. பிரேமா உதவிப்பொறியாளர் அவர்களுக்கு ரூ.37,760/- வழங்க மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

அலுவலக குறிப்பு

3. மன்றம் அனுமதிக்கலாம்
4. இதற்காகும் செலவினத்தை குடிநீர் நிதியிலிருந்து மேற்கொள்ளலாம்.

**(ந.க.எண்.6339/2018/இ1)**

**தீர்மான எண். 11 நாள். 30.01.2019**

அனுமதிக்கப்பட்டது

2) மேட்டூர் நகராட்சிக்குட்பட்ட பகுதிகளில் உள்ள குடியிருப்புகள் குடிநீர் வீட்டு இணைப்புகள் இல்லாத வீடுகளுக்கு TUFIDCO வட்டியில்லா கடன் மூலம் புதியதாக வீட்டு இணைப்புகள் வழங்கவும் அதற்கான தொகையினை 10 தவனை முறைகளில் செலுத்தவும் அதற்கான திட்ட பிரேரனை ரூ.240.00 இலட்சம் மதிப்பீட்டில் தயார் செய்யப்பட்டு நகராட்சி நிர்வாக மண்டல இயக்குநர்,சேலம் அவர்களின் வழியாக நிர்வாக ஆணையரகம், சென்னை அவர்களுக்கு சமர்ப்பிக்கப்பட்டு 7000 குடிநீர் வீட்டு இணைப்புகள் வழங்க TUFIDCO loan மூலம் பெற நகராட்சி நிர்வாக ஆணையர், சென்னை அவர்களின் செயல்முறை கடித ந.க.எண்.13277/2018/WS5 நாள்.19.06.2018ல் நிர்வாக அனுமதி பெறப்பட்டது. மேற்கண்ட பணிக்கு தொழில்நுட்ப அனுமதியினை திட்ட பிரேரனை மண்டல செயற்பொறியாளர் சேலம் அவர்களின் வழியாக தலைமைப் பொறியாளர் நகராட்சி நிர்வாக ஆணையரகம், சென்னை அவர்களிடம் சமர்ப்பிக்கப்பட்டு தலைமைப் பொறியாளர் நகராட்சி நிர்வாக ஆணையர், சென்னை அவர்களின் செயல்முறை கடித ந.க.எண்.13277/2018/DO1 நாள். 07.12.2018 அன்று தொழில்நுட்ப அனுமதி பெறப்பட்டது.

நிர்வாக அனுமதி மற்றும் தொழில்நுட்ப அனுமதி பெற திட்ட பிரேரனை தயார் செய்ய இந்நகராட்சியில் உதவிப்பொறியாளராக பணிபுரியும் திருமதி.எஸ்.பிரேமா அவர்கள் தன்னால் ரூ.8860/- செலவு செய்யப்பட்டது என தெரிவித்துள்ளார் மேற்கண்ட செலவினத்திற்கு திருமதி.எஸ்.பிரேமா உதவிப் பொறியாளர் அவர்களுக்கு ரூ.8860/- வழங்க மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

அலுவலக குறிப்பு

1. மன்றம் அனுமதிக்கலாம்
2. இதற்காகும் செலவினத்தை குடிநீர் நிதியிலிருந்து மேற்க்கொள்ளலாம்.

(ந.க.எண்.686/2018/அ5)

தீர்மான எண். 12 நாள். 30.01.2019

அனுமதிக்கப்பட்டது

3) மேட்டூர் நகராட்சி பகுதியில் நீண்ட நாட்களாக சொத்து வரி செலுத்தாமல் உள்ள வரி விதிப்பாளர்கள் மீது குற்றவியல் வழக்கு 2011 ஆம் ஆண்டு தொடரப்பட்டு சொத்துவரி வசூலிக்க நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது. குற்றவியல் நீதி மன்றம் எண்.I மற்றும் II ல் மேற்படி வழக்குகளை நகர்மன்ற வழக்கறிஞர் திரு.டி.எம்.எ.இனியன், பி.ஏ.பி.எல்.எல்.பி அவர்களை கொண்டு நடத்தப்பட்டு வருகிறது. மேற்படி வழக்குகளுக்கு வழக்கறிஞர் அவர்களுக்கு கட்டணம் வழங்குவதற்கு மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

அலுவலக குறிப்பு

1. அனுமதி வழங்கலாம்

**(ந.க.எண்.5613/2014/அ1)**

**தீர்மான எண். 13 நாள். 30.01.2019**

அனுமதிக்கப்பட்டது

4) மேட்டூர் நகராட்சியில் புதிய குடிநீர் நிலையத்தில் உள்ள 50HP Motor & Pump ன் Bearing and Coil மாற்றுதல் மற்றும் 6HP Submersible Motor ன் Bearing மற்றும் Coil மாற்றுதல் பணிக்கு ரூ.0.99 இலட்சம் மதிப்பீட்டில் ஒப்பந்தப்புள்ளிகள் கோரியதில் 25.01.2019 ம் தேதியன்று வரப்பெற்ற கீழ்க்காணும் இரண்டு ஒப்பந்தப்புள்ளிகள் மன்றத்தின் முடிவிற்கு வைக்கப்படுகிறது.

| வ எண் | ஒப்பந்ததாரர் பெயர் | ஒப்பந்தப்புள்ளி சதவிகிதம் அதிகம் / குறைவு |
|---|---|---|
| 1 | திரு.K.கோவிந்தன்,<br>பூசாரிப்பட்டி<br>சேலம் | 0.15% சதவிகிதம் மதிப்பீட்டை விட குறைவு |
| 2 | திரு.எம்.ராமசாமி<br>8/140 பெரிய வனவாசி<br>மேட்டூர் | 1.90% சதவிகிதம் மதிப்பீட்டை விட அதிகம் |

அலுவலக குறிப்பு

அவசர அவசியம் கருதி தனி அலுவலர் முன் அனுமதி பெற்று மன்ற அனுமதியை எதிர்நோக்கி ஒப்பந்தப்புள்ளி கோரியமைக்கு மன்றம் ஏற்கலாம்.

வரப்பெற்றுள்ள இரண்டு ஒப்பந்தப்புள்ளிகளில் மதிப்பீட்டு விலை விகிதத்தை விட 0.15% சதவீதம் குறைவாக ஒப்பந்தப்புள்ளி விலை விகிதம் கொடுத்துள்ள திரு.கோவிந்தன், பூசாரிப்பட்டி ஒப்பந்ததாரரது ஒப்பந்தப்புள்ளியினை மன்றம் ஏற்றுக் கொள்ளலாம்.

**(ந.க.எண்.5829/2018/இ1)**

**தீர்மான எண். 14 நாள். 30.01.2019**

அனுமதிக்கப்பட்டது

**5)** மேட்டூர் நகராட்சியில் பழைய சுத்திகரிப்பு நிலையத்தில் Chlorine Plant புதியதாக அமைத்தல் பணிக்கு ரூ.0.95 இலட்சம் மதிப்பீட்டில் ஒப்பந்தப்புள்ளிகள் கோரியதில் 25.01.2019ம் தேதியன்று வரப்பெற்ற கீழ்க்காணும் இரண்டு ஒப்பந்தப்புள்ளிகள் மன்றத்தின் முடிவிற்கு வைக்கப்படுகிறது.

| வ எண் | ஒப்பந்ததாரர் பெயர் | ஒப்பந்தப்புள்ளி சதவிகிதம் அதிகம் / குறைவு |
|---|---|---|

| | | |
|---|---|---|
| 1 | திரு.K.கோவிந்தன், பூசாரிப்பட்டி சேலம் | 0.25% சதவிகிதம் மதிப்பீட்டை விட குறைவு |
| 2 | திரு.எம்.ராமசாமி 8/140 பெரிய வனவாசி மேட்டூர் | 1.80% சதவிகிதம் மதிப்பீட்டை விட அதிகம் |

அலுவலக குறிப்பு

அவசர அவசியம் கருதி தனி அலுவலர் முன் அனுமதி பெற்று மன்ற அனுமதியை எதிர்நோக்கி ஒப்பந்தப்புள்ளி கோரியமைக்கு மன்றம் ஏற்கலாம்.

வரப்பெற்றுள்ள இரண்டு ஒப்பந்தப்புள்ளிகளில் மதிப்பீட்டு விலை விகிதத்தை விட 0.25% சதவீதம் குறைவாக ஒப்பந்தப்புள்ளி விலை விகிதம் கொடுத்துள்ள திரு.கோவிந்தன், ஒப்பந்ததாரரது ஒப்பந்தப்புள்ளியினை மன்றம் ஏற்றுக் கொள்ளலாம்.

**(ந.க.எண்.5504/2018/இ1)**

**தீர்மான எண். 15 நாள். 30.01.2019**

**அனுமதிக்கப்பட்டது**

**6)** மேட்டூர் நகராட்சியில் சர்ச் ரோடு முதல் மேற்கு மெயின் ரோடு சாலையில் உள்ள அணுகு சாலைகள் தார்சாலை மேம்படுத்துதல் பணிக்கு ரூ.6.00 இலட்சம் மதிப்பீட்டில் ஒப்பந்தப்புள்ளிகள் கோரியதில் 25.01.2019 ம் தேதியன்று வரப்பெற்ற கீழ்க்காணும் இரண்டு ஒப்பந்தப்புள்ளிகள் மன்றத்தின் முடிவிற்கு வைக்கப்படுகிறது.

| வ எண் | ஒப்பந்ததாரர் பெயர் | ஒப்பந்தப்புள்ளி சதவிகிதம் அதிகம் / குறைவு |
|---|---|---|
| 1 | திரு.ஆர்.மாதையன், செட்டிப்பட்டி, கோவிந்தப்பாடி மேட்டூர் | 0.25% சதவிகிதம் மதிப்பீட்டை விட குறைவு |
| 2 | திரு.மா.சுப்ரமணியன் கோவிந்தப்பாடி, மேட்டூர் | 2.90% சதவிகிதம் மதிப்பீட்டை விட அதிகம் |

அலுவலக குறிப்பு

வரப்பெற்றுள்ள இரண்டு ஒப்பந்தப்புள்ளிகளில் மதிப்பீட்டு விலை விகிதத்தை விட 0.25% சதவிகிதம் குறைவாக ஒப்பந்தப்புள்ளி விலை விகிதம் கொடுத்துள்ள திரு.ஆர்.மாதையன், செட்டிப்பட்டி ஒப்பந்ததாரரது ஒப்பந்தப்புள்ளியினை மன்றம் ஏற்றுக்கொள்ளலாம்.

**(ந.க.எண்.2650–1/2018/இ1)**

**தீர்மான எண். 16 நாள். 30.01.2019**

**அனுமதிக்கப்பட்டது**

**7)** இந்நகராட்சியில் பொது சுகாதாரப் பிரிவில் TN30 V 8764 ன் வாகனத்தின் தகுதி சான்று புதுப்பித்து வாகனத்தின் உள்ள பழுதுகளை சரிசெய்தல் பணிக்கு ரூ.1.10 இலட்சம் மதிப்பீட்டில் ஒப்பந்தப்புள்ளிகள் கோரியதில் 25.01.2019 ம் தேதியன்று வரப்பெற்ற கீழ்க்காணும் இரண்டு ஒப்பந்தப்புள்ளிகள் மன்றத்தின் முடிவிற்கு வைக்கப்படுகிறது.

| வ எண் | ஒப்பந்ததாரர் பெயர் | ஒப்பந்தப்புள்ளி தொகை | ஒப்பந்தப்புள்ளி சதவிகிதம் அதிகம் / குறைவு |
|---|---|---|---|
| 1 | திருவாளர்.இலட்சுமி ஆட்டோ டீசல் ஒர்க்ஸ் | ரூ.1,08,000/- | குறைவு |
| 2 | திருவாளர். J.V.K ஆட்டோ டீசல் ஒர்க்ஸ் | ரூ.1,12,000/- | அதிகம் |

அலுவலக குறிப்பு

வரப்பெற்றுள்ள இரண்டு ஒப்பந்தப்புள்ளிகளில் குறைந்த ஒப்பந்தப்புள்ளியாக ரூ.1,08,000/-யை என குறைவாக ஒப்பந்தப்புள்ளி கொடுத்துள்ள திருவாளர்.இலட்சுமி ஆட்டோ டீசல் ஒர்க்ஸ் ஒப்பந்ததாரரது ஒப்பந்தப்புள்ளியினை மன்றம் ஏற்றுக்கொள்ளலாம்.

**(ந.க.எண்.5742/2018/இ1)**

**தீர்மான எண். 17 நாள். 30.01.2019**

அனுமதிக்கப்பட்டது

**8)** மேட்டூர் நகராட்சி அலுவலக வளாகத்தில் இருசக்கர வாகனங்கள் நிறுத்துமிடம் அமைத்தல் பணிக்கு ரூ.2.00 இலட்சம் மதிப்பீட்டில் ஒப்பந்தப்புள்ளிகள் கோரியதில் 29.01.2019 ம் தேதியன்று வரப்பெற்ற கீழ்க்காணும் இரண்டு ஒப்பந்தப்புள்ளிகள் மன்றத்தின் முடிவிற்கு வைக்கப்படுகிறது.

| வ எண் | ஒப்பந்ததாரர் பெயர் | ஒப்பந்தப்புள்ளி சதவிகிதம் அதிகம் / குறைவு |
|---|---|---|
| 1 | திரு.எம்.ஆர். & கோ இந்திரா நகர் மேட்டூர் | 0.15% சதவிகிதம் மதிப்பீட்டை விட குறைவு |
| 2 | திருவாளர். சி.பி.சாமி & கோ மாரத்துப்பட்டி குப்பனூர்(அஞ்சல்) மேட்டூர் | 1.80% சதவிகிதம் மதிப்பீட்டை விட அதிகம் |

அலுவலக குறிப்பு

வரப்பெற்றுள்ள இரண்டு ஒப்பந்தப்புள்ளிகளில் மதிப்பீட்டு விலை விகிதத்தை விட 0.15% சதவீதம் குறைவாக ஒப்பந்தப்புள்ளி விலை விகிதம் கொடுத்துள்ள திரு.எம்,ஆர். & கோ, மேட்டூர் ஒப்பந்ததாரரது ஒப்பந்தப்புள்ளியினை மன்றம் ஏற்றுக் கொள்ளலாம்.

**(ந.க.எண்.5897/2018/இ1)**

**தீர்மான எண். 18 நாள். 30.01.2019**

அனுமதிக்கப்பட்டது

**9)** மேட்டூர் நகராட்சியில் பாதாள சாக்கடை இணைப்பு திட்டத்திற்கு திட்டம் அலுவலக பயன்பாட்டிற்கு புதியதாக இரண்டு System மற்றும் HP Laser Jet Printer 02 எண்ணிக்கை வாங்குதல் பணிக்கு ரூ.1.25 இலட்சம் மதிப்பீட்டில் ஒப்பந்தப்புள்ளிகள் கோரியதில் 30.01.2019 ம் தேதியன்று வரப் பெற்ற கீழ்க்காணும் இரண்டு ஒப்பந்தப்புள்ளிகள் மன்றத்தின் முடிவிற்கு வைக்கப்படுகிறது.

| வ எண் | ஒப்பந்ததாரர் பெயர் | ஒப்பந்தப்புள்ளி சதவிகிதம் அதிகம் / குறைவு |
|---|---|---|
| 1 | M/s Spyder Technology, Suramangalam Main Road, Salem 636005 | 0.26% சதவிகிதம் மதிப்பீட்டை விட குறைவு |
| 2 | M/s Venus Tech, Meyyanoor Main Road Salem636004 | 1.90% சதவிகிதம் மதிப்பீட்டை விட அதிகம் |

<u>அலுவலக குறிப்பு</u>

வரப்பெற்றுள்ள இரண்டு ஒப்பந்தப்புள்ளிகளில் மதிப்பீட்டு விலை விகிதத்தை விட 0.26% சதவீதம் குறைவாக ஒப்பந்தப்புள்ளி விலை விகிதம் கொடுத்துள்ள M/s Spyder Technology, Salem ஒப்பந்ததாரரது ஒப்பந்தப்புள்ளியினை மன்றம் ஏற்றுக் கொள்ளலாம்.

**(ந.க.எண்.6109/2018/இ1)**

**தீர்மான எண். 19 நாள். 30.01.2019**

அனுமதிக்கப்பட்டது

**10)** மேட்டூர் நகராட்சியில் பொது சுகாதாரத்தில் உள்ள 15 டம்பர் பிளசர் பின்கள் பழுது பார்த்தல் பணிக்கு ரூ.4.50 இலட்சம் மதிப்பீட்டில் ஒப்பந்தப்புள்ளிகள் கோரியதில் 30.01.2019 ம் தேதியன்று வரப் பெற்ற கீழ்க்காணும் இரண்டு ஒப்பந்தப்புள்ளிகள் மன்றத்தின் முடிவிற்கு வைக்கப்படுகிறது.

| வ எண் | ஒப்பந்ததாரர் பெயர் | ஒப்பந்தப்புள்ளி சதவிகிதம் அதிகம் / குறைவு |
|---|---|---|
| 1 | M/s.Pownampal Construction 7/120-A, Old Market Indira Nagar, Mettur | 0.28% சதவிகிதம் மதிப்பீட்டை விட குறைவு |
| 2 | M/s K.Govindan Poosaripatti Omalur (Tk), Salem (Dt) | 1.15% சதவிகிதம் மதிப்பீட்டை விட அதிகம் |

<u>அலுவலக குறிப்பு</u>

வரப்பெற்றுள்ள இரண்டு ஒப்பந்தப்புள்ளிகளில் மதிப்பீட்டு விலை விகிதத்தை விட 0.28% சதவீதம் குறைவாக ஒப்பந்தப்புள்ளி விலை விகிதம் கொடுத்துள்ள M/s.Pownampal Construction Mettur ஒப்பந்ததாரரது ஒப்பந்தப்புள்ளியினை மன்றம் ஏற்றுக் கொள்ளலாம்.

**(ந.க.எண்.6185/2018/இ1)**

**தீர்மான எண். 20 நாள். 30.01.2019**

அனுமதிக்கப்பட்டது

**11)** மேட்டூர் நகராட்சியில் பொது சுகாதாரத்தில் உள்ள 15 காம்பாக்ட் பின்கள் பழுது பார்த்தல் பணிக்கு ரூ.4.00 இலட்சம் மதிப்பீட்டில் ஒப்பந்தப்புள்ளிகள் கோரியதில் 30.01.2019 ம் தேதியன்று வரப் பெற்ற கீழ்க்காணும் இரண்டு ஒப்பந்தப்புள்ளிகள் மன்றத்தின் முடிவிற்கு வைக்கப்படுகிறது.

| வ எண் | ஒப்பந்ததாரர் பெயர் | ஒப்பந்தப்புள்ளி சதவிகிதம் அதிகம் / குறைவு |
|---|---|---|
| 1 | M/s.Pownampal Construction 7/120-A, Old Market Indira Nagar, Mettur 636401 | 0.28% சதவிகிதம் மதிப்பீட்டை விட குறைவு |
| 2 | K.Govindan Poosaripatti Omalur (Tk), Salem (Dt) | 1.15% சதவிகிதம் மதிப்பீட்டை விட அதிகம் |

அலுவலக குறிப்பு

வரப்பெற்றுள்ள இரண்டு ஒப்பந்தப்புள்ளிகளில் மதிப்பீட்டு விலை விகிதத்தை விட 0.28% சதவீதம் குறைவாக ஒப்பந்தப்புள்ளி விலை விகிதம் கொடுத்துள்ள M/s.Pownampal Construction, Mettur ஒப்பந்ததாரரது ஒப்பந்தப்புள்ளியினை மன்றம் ஏற்றுக் கொள்ளலாம்.

**(ந.க.எண்.6184/2018/இ1)**

**தீர்மான எண். 21 நாள். 30.01.2019**

அனுமதிக்கப்பட்டது

**12)** மேட்டூர் நகராட்சியில் TN 27S 1953 வாகனத்திற்கு 12 V130A4 திறன் கொண்ட பேட்டரி வாங்குதல் பணிக்கு ரூ.11500/- மதிப்பீட்டில் ஒப்பந்தப்புள்ளிகள் கோரியதில் 25.01.2019 ம் தேதியன்று வரப்பெற்ற கீழ்க்காணும் இரண்டு ஒப்பந்தப்புள்ளிகள் மன்றத்தின் முடிவிற்கு வைக்கப்படுகிறது.

| வ எண் | ஒப்பந்ததாரர் பெயர் | ஒப்பந்தப்புள்ளி தொகை |
|---|---|---|
| 1 | M/s.Power city Battery Mettur Salem | ரூ.11800/- |
| 2 | M/s Auto Start Salem | ரூ.11900/- |
| 3 | M/s. Joseph Battery Works Salem | ரூ.11500/- |

அலுவலக குறிப்பு

1. **செலவினம் ரூ.11500/- க்கு பொது நிதியிலிருந்து பணி மேற்கொள்ளலாம்.**
2. **அவசர அவசியம் கருதி தனி அலுவலர் முன்னனுமதி பெற்று மன்ற அனுமதியினை எதிர்நோக்கி ஒப்பந்தபுள்ளி கோரியமைக்கு மன்றம் ஏற்கலாம்.**
3. **வரப்பெற்றுள்ள மூன்று விலைப்புள்ளிகளில் மதிப்பீட்டு தொகை விட 11500/- என கொடுத்துள்ள** M/s. Joseph Battery Works Salem ஒப்பந்ததாரரது ஒப்பந்தப்புள்ளியினை மன்றம் ஏற்றுக் கொள்ளலாம்.
4. **அவசர அவசியம் கருதி தனி அலுவலர் முன்னனுமதி பெற்று மன்ற அனுமதியினை எதிர்நோக்கி பணி உத்திரவு வழங்கியமைக்கு மன்றம் ஏற்கலாம்.**

**(ந.க.எண்.220/2019/இ1)**

**தீர்மான எண். 22 நாள். 30.01.2019**

அனுமதிக்கப்பட்டது

**13)** மேட்டூர் நகராட்சியில் சர்ச் ரோடு முதல் ICH ரோடு பகுதியில் பாதாள சாக்கடைத் திட்டத்திற்கு வெட்டப்பட்ட பகுதியில் பேருந்துகள் மற்றும் வாகனங்கள் செல்ல வழி வகைகள் செய்ய குண்டும் குழியுமாகி உள்ள சாலைகளை தார் பேட்ச் ஒர்க் மட்டும் மேற்கொள்ள தயாரிக்கப்பட்ட மதிப்பீடு தொகை ரூ.8.00 இலட்சம் ஆகும். மேற்கண்ட செலவினத்தை மேற்க்கொள்ள மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

அலுவலக குறிப்பு

1. மன்றம் அனுமதிக்கலாம்
2. இதற்காகும் செலவினத்தை பொது நிதியிலிருந்து மேற்க்கொள்ளலாம்.

**(ந.க.எண்.2650–2/2018/இ1)**

**தீர்மான எண். 23 நாள். 30.01.2019**

**அனுமதிக்கப்பட்டது**

**14)** நகராட்சி நிர்வாக ஆணையர் அலுவலக மின்னஞ்சல் நாள்.06.08.2018, நகராட்சி நிர்வாக ஆணையர், சென்னை அவர்களின் ஆய்வுக்கூட்ட அறிவுரை நாள்.10.10.2018 மற்றும் நகராட்சி நிர்வாக மண்டல இயக்குநர், சேலம் அவர்களின் ஆய்வுக்கூட்ட அறிவுரை நாள்.12.10.2018-ன் படி சாலையோர வியாபாரிகளுக்கான வாழ்வாதாரத்திற்கு மேம்பாட்டு வசதிகளாக சாலையோர பிளாட்பாரம், பொருட்கள் வைக்கும் அறை (Clark Room) குடிநீர் வசதி, கழிப்பிட வசதி போன்ற வசதிகள் செய்து தர விரிவான திட்ட அறிக்கை (Detailed Implementation Plan DIP) தயார் செய்து விரைவில் நகராட்சி நிர்வாக ஆணையர் அவர்களுக்கு அனுப்புமாறு தெரிவிக்கப்பட்டுள்ளது. இந்நகராட்சியில் உள்ள சாலையோர வியாபாரிகளை GPS தொழில்நுட்பம் மூலம் 2016ம் ஆண்டில் " **ஸ்ரீ மாங்காடு காமாட்சியம்மன் பிஸினஸ் கார்ப்பரேசன் ( InFO Maps) சென்னை என்ற நிறுவனம் கணக்கெடுப்பு பணி செய்யப்பட்டு மேற்படி நிறுவனம் மூலம் தயாரிக்கப்பட்ட Bio- Metric முறையிலான அடையாள அட்டை அனைத்து சாலையோர வியாபாரிகளுக்கும் வழங்கப்பட்டுள்ளது. மேற்கண்ட கணக்கெடுப்பு பணியின் விபரம் (Datas) முழுவதும் மேற்படி நிறுவனம் வசம் தற்போதும் உள்ளது. எனவே மேற்கண்டவாறு விரிவான திட்ட**

**அறிக்கை தயாரிக்கும் பணியை மேற்படி நிறுவனம் " ஸ்ரீ மாங்காடு காமாட்சியம்மன் பிஸினஸ் கார்ப்பரேசன் (Infomaps), Chennai மூலம் செய்யவும், மேற்கண்ட பணியை செய்வதற்கான தோராய செலவினம் ரூ.5000/- க்கும் , தயார் செய்யப்பட்டு மின்னஞ்சல் மூலம் பெறப்படும் விரிவான திட்ட அறிக்கையை தேவையான தொகுப்பு (clark Led) தயாரிக்க கலர்பிரிண்ட் எடுத்து, புக் பைண்டிங் செய்ய ஆகும், உத்தேச செலவினம் ரூ.5000/- க்கும் ஆக மொத்தம் ரூ.10,000/- ற்கு நகர் மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.**

அலுவலக குறிப்பு

மேற்படி செலவின தொகை ரூ.10,000/- மேற்படி திட்டத்திற்காக ஒதுக்கீடு செய்யப்பட்ட நிதியில் செலவு செய்ய மன்றம் அனுமதிக்கலாம்.

**(ந.க.எண்.3863/2014/எப்1)**

**தீர்மான எண். 24 நாள். 30.01.2019**

அனுமதிக்கப்பட்டது

**15)** மேட்டூர் நகராட்சி அலுவலகத்தில் மேலாளர் மற்றும் கணக்காளர் தனி அறைகளும் மற்றும் அலுவலக எழுத்தர்களுக்கு தனி அட்டியல்கள் அமைத்தல் பணிக்கு ரூ.5.00 இலட்சம் மதிப்பீட்டில் ஒப்பந்தப்புள்ளிகள் கோரியதில் வரப்பெற்ற கீழ்க்காணும் இரண்டு ஒப்பந்தப்புள்கிள் மன்றத்தின் முடிவிற்கு வைக்கப்படுகிறது.

| வ எண் | ஒப்பந்ததாரர் பெயர் | ஒப்பந்தப்புள்ளி சதவிகிதம் அதிகம் / குறைவு |
|---|---|---|
| 1 | திரு. C.P.Saamy & Co<br>Marathupatti East kadu, Gonur<br>Mettur | 0.28% சதவிகிதம் மதிப்பீட்டை விட குறைவு |
| 2 | திரு.K.A.Kumar<br>Contractor<br>Kunjandiyur | 1.10% சதவிகிதம் மதிப்பீட்டை விட அதிகம் |

அலுவலக குறிப்பு

1. அவசர அவசியம் கருதி தனி அலுவலர் முன் அனுமதி பெற்று ஒப்பந்தப்புள்ளி கோரியமைக்கு மன்றம் அனுமதிக்கலாம்

2. வரப் பெற்றுள்ள இரண்டு ஒப்பந்தப்புள்ளிகளில் மதிப்பீட்டு விலை விகிதத்தை விட 0.28 சதவீதம் குறைவாக ஒப்பந்தப்புள்ளி விலை விகிதம் கொடுத்துள்ள C.P.Saamy & Co ஒப்பந்ததாரரது ஒப்பந்தப்புள்ளியினை மன்றம் ஏற்றுக் கொள்ளலாம்.

**(ந.க.எண்.6017/2018/இ1)**

**தீர்மான எண். 25 நாள். 30.01.2019**

அனுமதிக்கப்பட்டது

**16)** மேட்டூர் நகராட்சியில் தங்கமாபுரிபட்டிணம் நீரேற்றும் நிலையத்தில் புதியதாக 12.50 HP எண்ணிக்கை மோட்டார் பொருத்துதல் பணிக்கு ரூ.2.00 இலட்சம் மதிப்பீட்டில் ஒப்பந்தப்புள்ளிகள் கோரியதில் 11.01.2019 ம் தேதியன்று வரப்பெற்ற கீழ்காணும் இரண்டு ஒப்பந்தப்புள்ளிகள் மன்றத்தின் முடிவிற்கு வைக்கப்படுகிறது.

| வ எண் | ஒப்பந்ததாரர் பெயர் | ஒப்பந்தப்புள்ளி சதவிகிதம் அதிகம் / குறைவு |
|---|---|---|
| 1 | திரு. கே.கோவிந்தன்<br>பூசாரிப்பட்டி<br>ஓமலூர் | 1.15% சதவிகிதம் மதிப்பீட்டை விட அதிகம் |
| 2 | திரு.பெஸ்ட் இன்ஜினியரிங் ஒர்க்ஷாப் கார்னர்<br>மேட்டூர் | 0.20% சதவிகிதம் மதிப்பீட்டை விட குறைவு |

அலுவலக குறிப்பு

1. அவசர அவசியம் கருதி தனி அலுவலர் முன் அனுமதி பெற்று ஒப்பந்தப்புள்ளி கோரியமைக்கு மன்றம் அனுமதிக்கலாம். இதற்கான செலவினத்தை குடிநீர் நிதியில் மேற்கொள்ளலாம்.
2. வரப் பெற்றுள்ள இரண்டு ரூ.2.00 இலட்சம் ஒப்பந்தப்புள்ளிகளில் மதிப்பீட்டு விலை விகிதத்தை விட 0.20 சதவீதம் குறைவாக ஒப்பந்தப்புள்ளி விலை விகிதம் கொடுத்துள்ள திரு.பெஸ்ட் இன்ஜினியரிங் மேட்டூர் ஒப்பந்ததாரரது ஒப்பந்தப்புள்ளியினை மன்றம் ஏற்றுக் கொள்ளலாம்.

**(ந.க.எண்.46/2018/இ1)**

**தீர்மான எண். 26 நாள். 30.01.2019**

அனுமதிக்கப்பட்டது

**17) மேட்டூர் நகரில் குடிநீர் மேம்பாட்டுத் திட்டம் தமிழ்நாடு குடிநீர் வடிகால் வாரியம் மூலம் தயாரிக்கப்பட்ட விரிவான திட்ட மதிப்பீடு ரூ.1247.19 இலட்சத்திற்கு அரசாணை எண்.2(D) நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கல் துறை நாள்.20.07.2009-ல் சிறிய மற்றும் நடுத்தர நகரங்களுக்கான உள்கட்டமைப்பு வசதி திட்டத்தில் மேற்கொள்ள நிர்வாக**

**அனுமதி வழங்கப்பட்டது. அதன்படி இப்பணிகள் தமிழ்நாடு குடிநீர் வடிகால் வாரியத்தினரால் மேற்கொள்ளப்பட்டு 2015 ஆம் ஆண்டு முடிக்கப்பட்டு நகராட்சி வசம் 2016- ல் ஒப்படைக்கப்பட்டது.**

மேட்டூர் நகராட்சியில் 16749 எண்ணிக்கையிலான சொத்துவரி இனங்கள் உள்ளன. அவற்றில் 12501 எண்ணிக்கையில் குடியிருப்புகள் உள்ளன. இவற்றில் 7776 எண்ணிக்கையிலான வீட்டு குடிநீர் குழாய் இணைப்புகள் உள்ளன. நகராட்சி நிர்வாக மண்டல இயக்குநர், சேலம் அவர்களால் நடத்தப்பட்ட ஆய்வுக்கூட்ட அறிவுரைகளின்படி மேட்டூர் நகராட்சி எல்லைக்குள் அனைத்து குடியிருப்புகளுக்கும் குடிநீர் வீட்டு குழாய் இணைப்புகள் வழங்க வேண்டி அறிவுறுத்தப்பட்டுள்ளது.

எனவே 7000 எண்ணிக்கையிலான குடிநீர் வீட்டு இணைப்புகளை பகிர்மானக் குழாயில் இருந்து வீட்டின் உட்புறத்தில் குழாய் இணைப்பு வழங்க வேண்டி பணிகளை மேற்கொள்ள ஆகும். மதிப்பீட்டுத் தொகை ரூ.232.00 லட்சத்திற்கு நிர்வாக அனுமதி பெற பிரேரணையினை அனுப்பப்பட்டு நகராட்சி நிர்வாக ஆணையர் சென்னை அவர்களின் செயல்முறை கடித ந.க.எண்.13277/2018WS-1 நாள்.19.06.2018ல் ரூ.232.00 லட்சத்திற்கு TUFIDCO சுழல் நிதியில் வட்டியில்லா கடன் மூலம் பெற்று மேற்கொள்ள நிர்வாக அனுமதி வழங்கி உத்திரவு பெறப்பட்டுள்ளது.

மேற்படி வட்டியில்லா கடன் பெற TUFIDCO நிறுவனம் சென்னையில் நடைபெற்ற மதிப்பீடு (Apparaisal) ஆய்வு கூட்டத்தில் மதிப்பீடு சரிபார்க்கப்பட்டது. தமிழ்நாடு நகர்புற வளர்ச்சி நிறுவனம் (TUFIDCO) கடித எண். TUFIDCO/URF 1819-33 ULBs /AM (m)2018 நாள்.15.10.2018ல் 7000 எண்ணிக்கையிலான குடிநீர் வீட்டு இணைப்புகள் பகிர்மான குழாயிலிருந்து வீட்டின் குழாய் இணைப்பு வழங்க வேண்டி GST மற்றும் இதர கட்டாய வழிவகைகள் தவிர திட்ட செலவினம் ரூ.200.77 லட்சத்திற்கு வட்டியில்லா கடன் சுழல் நிதியின் கீழ் ஒப்புதல் கடிதம் வழங்கியுள்ளது.

எனவே மதிப்பீட்டுத் தொகை ரூ.232.00 லட்சத்தில் கடன் தொகை ரூ.200.77 லட்சத்திற்கு போக மீதமுள்ள தொகையான 31.23 லட்சத்திற்கு நகராட்சி நிதி நிலையினை கருத்தில் கொண்டு உள்கட்டமைப்பு இடைவெளி நிரப்பு மற்றும் இயக்குதல், பராமரிப்பு நிதி அல்லது IUDM திட்ட நிதியில் இருந்து நிதி ஒதுக்கீடு செய்து தருமாறும், அனைத்து வீடுகளுக்கும் குடிநீர் வீட்டிணைப்பு வழங்கும் பணிகளை ரூ.232.00 இலட்சம் மதிப்பீட்டில் மேற்க்கொள்ள அனுமதிக்கவும் இணைப்பு வழங்கிய பிறகு குடியிருப்பு உரிமையாளர்களிடம் இருந்து தவணை முறையில் இத்தொகையினையும் மற்றும் முன் வைப்பு தொகையினையும் பயனீட்டாளர் கட்டணத்துடன் சேர்த்து வசூல் செய்து கொள்ளவும் நகராட்சி நிர்வாக ஆணையர் அவர்களுக்கு அனுப்பி திருத்திய நிதி ஆதாரத்திற்கு நிர்வாக அனுமதி வழங்கப்பட்டது.

இப்பணியினை மேற்கொள்ள 22.01.2019ல் ஒப்பந்த புள்ளி கோரியதில் வரப்பெற்ற கீழ்க்கண்ட இரண்டு ஒப்பந்தப்புள்ளிகள் மன்றத்தின் பார்வைக்கும் முடிவிற்கும் வைக்கப்படுகிறது.

| வ எண் | ஒப்பந்ததாரர் பெயர் மற்றும் முகவரி |
|---|---|
| 1 | திருவாளர்.கார்த்திக் கன்ஷ்ரக்சன்ஸ், ஒப்பந்ததாரர், நீலமேக ரெசிடென்சி சுப்ரமணிய நகர், சேலம் |
| 2 | M/S ஆண்டவர் கன்ஷ்ரக்சன்ஸ், ஒப்பந்ததாரர், மேற்கு மெயின் ரோடு மேட்டூர் |

வரப்பெற்றுள்ள இரண்டு ஒப்பந்தபுள்ளிகளையும் இந்நகராட்சியின் ஒப்பந்த கூர்ந்தாய்வு குழு மூலம் கூர்ந்தாய்வு செய்ததில் வரப்பெற்ற இரண்டு ஒப்பந்த புள்ளிகளும், தகுதி பெற்றுள்ள ஒப்பந்தபுள்ளிகள் ஆகும். ஆதலால், ஒப்பந்த புள்ளிகளின் விலைவிகித பட்டியல் 28.01.2019ல் திறக்கப்பட்டு அதன் ஒப்புநோக்கு பட்டியல் கீழ்க்கண்டவாறு தயார் செய்யப்பட்டுள்ளது.

| வ எண் | ஒப்பந்ததாரர் பெயர் | ஒப்பந்தப்புள்ளி சதவிகிதம் அதிகம் / குறைவு |
|---|---|---|
| 1 | திருவாளர்.கார்த்திக் கன்ஷ்ரக்சன்ஸ், ஒப்பந்ததாரர், நீலமேக ரெசிடென்சி சுப்ரமணிய நகர், சேலம் | 4.97% அதிகம் |
| 2 | M/S . ஆண்டவர் கன்ஷ்ரக்சன்ஸ், ஒப்பந்ததாரர், மேற்கு மெயின் ரோடு மேட்டூர் | 13.93% அதிகம் |

மேற்கண்ட பணிக்கு குறைந்த ஒப்பந்த புள்ளியாக, மதிப்பீட்டை விட 4.97% கூடுதலாக வழங்கியுள்ள திருவாளர்.கார்த்திக் கன்ஷ்ரக்சன்ஸ், ஒப்பந்ததாரர், நீலமேக ரெசிடென்சி சுப்ரமணிய நகர், சேலம் அவர்களுக்கு விலை குறைப்பு செய்து தர கோரி 28.01.2019ல் விலை குறைப்பு கடிதம் அனுப்பப்பட்டதில் ஒப்பந்ததாரர் தனது 29.01.2019 ம் தேதிய கடிதத்தில் குடிநீர் பொருட்களின் விலையேற்றம் மற்றும் தொழிலாளர்களின் கூலி உயர்வு ஆகியவற்றின் காரணமாக தன்னால் மதிப்பீட்டை விட கூடுதலாக 4.97% வழங்கிய ஒப்பந்தபுள்ளி விகிதத்தை குறைத்து தர இயலாது என தெரிவித்துள்ளார்.

அதன் அடிப்படையில் உள்ளூர் விலை விகிதத்தின்படி ஒப்புநோக்கியதில் மேற்படி விலைவிகிதம் உள்ளூர் மார்க்கெட் விலைவிகிதங்களை அனுசரித்துள்ளதால் திருவாளர்.கார்த்திக் கன்ஷ்ரக்சன்ஸ், என்பவர் மதிப்பீட்டை விட கூடுதலாக 4.97% அதிகமாக வழங்கிய ஒப்பந்தபுள்ளியை, பொறியியல் வழிகாட்டு நூலின் குறிப்புகளின்படி ஏற்க மன்றத்தின் அனுமதிக்கும் முடிவிற்கும் வைக்கப்படுகிறது.

அலுவலக குறிப்பு

மன்றம் அனுமதி வழங்கலாம்.

**(ந.க.எண்.686/2018/அ5)**

**தீர்மான எண். 27 நாள். 30.01.2019**

அனுமதிக்கப்பட்டது

ஆணையாளர் (ம) தனி அலுவலர்,
மேட்டூர் நகராட்சி